ஆண்டு பட்டிகை வழக்கு எண்.173/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 173/2025 | LW– 1 | PW– 1 | |
| Name | : அம்சத்பேகம் ( புகார்தாரர்) | | |
| Father's Name | : அயூப்கான் | | |
| Village | : தர்பார் நகர் | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 45/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of June 2026

( எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன கமர்தீன் என் அப்பா ஆவார். எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 13.07.2025ம் தேதி பகல் சுமார் 12.45 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது செல்லப்பா என்பவர் போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார். என் அப்பா ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் விளாம்பட்டி அருகே சென்றபோது விபத்து ஏற்பட்டதாக செல்லப்பா என்பவர் என்னிடம் கூறினார். அதன்பேரில் நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, என் அப்பாவிற்கு பின்பக்க தலை, நெஞ்சு மற்றும் உடம்பு முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தது. வலது கையை தூக்கமுடியாத நிலையில் சிகிச்சையில் இருந்தார். என் அப்பா அங்கு 2, 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தபோது என் அப்பாவை அழைத்து செல்லுமாறு மருத்துவர்

சொன்னதால் நாங்கள் மதுரை மீனாட்சி தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு 30.07.2025ம் தேதி என் அப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். சம்பவத்தில் என் அப்பாவின் மீது மோதியது கார் என்றும், அதனை ஓட்டியவர் மதுரைக்காரர் என்றும் கூறினார்கள். பின்னர் நான் நத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். (**அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.06.09 17:58:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 173/2025 LW- 3 PW- 2

Name : ஆசிக் ராஜா (கேள்வியுற்ற சாட்சி)

Father's Name : அயூப்கான்

Village : தர்பார் நகர்

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 25/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of June 2026

( எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து இனிப்பு வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 என் அம்மா. இவ்வழக்கில் இறந்துபோன கமர்தீன் என் அய்யா ஆவார். இவ்வழக்கின் எதிரி சம்சுதீன் மகன் அசன்உசேன் என்று கேள்விப்பட்டேன். கடந்த 13.07.2025ம் தேதி பகல் சுமார் 12.45 மணியளவில் நான் சமுத்திராபட்டியில் நான் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது, செல்லப்பா என்பவர் போன் மூலம் விளாம்பட்டி விலக்கின் அருகில் என் அய்யா கமர்தீன் ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் சென்றபோது கார் மோதி விபத்து ஏற்பட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் வைத்திருப்பதாக கூறினார். அதன்பேரில் நான் நத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, என் அய்யாவிற்கு தலையில் பலத்த காயமும், உடல் முழுவதும் வீக்கக் காயங்களும் இருந்தது. என் அய்யாவை அன்றையதினமே மேல் சிகிச்சைக்காக மதுரை

அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு ஒரு நாள் சிகிச்சை பெற்ற பின்னர் என் அய்யாவை மதுரை மீனாட்சி  மிஷன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம்.  அங்கு 30.07.2025ம் தேதி என் அய்யா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்.  போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.06.09 17:58:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.173/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 173/2025 | LW- 5 | PW- 3 |

Name : **ஷேக் அப்துல் லத்தீப்** (பார்வை மகஜர் சாட்சி)

Father's Name : **ஜமால்தீன்**

Village : **முஸ்லீம் தெரு**

Taluk : **நத்தம்**

District : **திண்டுக்கல்**

Age : 50/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of June 2026

( எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வியாபாரம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. கடந்த 15.07.2025ம் தேதி காலை சுமார் 8.00 மணியளவில் விளாம்பட்டி விலக்கில் விபத்து நடந்த இடத்தில் சார்பு ஆய்வாளர் திரு.தர்மர் அங்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து விசாரணை செய்தார். பின்னர் சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நானும், அப்துல் சமது என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.06.09 17:58:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்